# புதிய மூல மதிப்பாய்வு (NSR) புதுப்பிப்பு சான்றிதழுக்கான எளிய மொழி சுருக்கம்
# காற்றின் புதிய மூல மதிப்பாய்வு அனுமதி எண் 9260க்கான விண்ணப்பம்

*30 டெக்சாஸ் நிர்வாகக் குறியீடு அத்தியாயம் 39 இன் படி, டெக்சாஸ் சுற்றுச்சூழல் தர ஆணையத்தால் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகிற, நிலுவையிலிருக்கும் இந்தக் காற்று அனுமதி விண்ணப்பத்திற்குபின்வரும் சுருக்கம் வழங்கப்படுகிறது. இந்தச் சுருக்கத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் விண்ணப்பத்தின் தொழில்நுட்ப மதிப்பாய்வின்போது மாறக்கூடும், மேலும் இவை அனுமதி விண்ணப்பத்தின் கூட்டாட்சி அமலாக்கம் செய்யக்கூடிய பிரதிநிதித்துவங்கள் அல்ல.*

மார்ட்டின் மரியெட்டா மெட்டீரியல்ஸ் சவுத்வெஸ்ட், எல்எல்சி (Martin Marietta Materials Southwest, LLC, CN606114726) ஆனது அனுமதி எண் 9260க்கான புதுப்பிப்பு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ளது. தி பெக்மேன் நொறுக்கும் ஆலை (RN102512126) பெக்சர் கவுண்டியின் சான் அன்டோனியோவில் உள்ள 18495 வடமேற்கு இராணுவ நெடுஞ்சாலையில் நொறுக்கப்பட்ட மற்றும் உடைக்கப்பட்ட சுண்ணாம்புக் கல்லை உற்பத்தி செய்கிறது/தயாரிப்பு செய்கிறது.

இந்தப் புதுப்பிப்பு பெக்மேன் நொறுக்கும் ஆலையின் தொடர்ச்சியான செயல்பாட்டை அங்கீகரிக்கும். மார்ட்டின் மரியெட்டா மெட்டீரியல்ஸ் சவுத்வெஸ்ட், எல்எல்சி அனுமதிப்பத்திரத்தில் எந்த மாற்றங்களும் இருக்காது என்று சான்றளித்துள்ளது. பின்வரும் அனுமதிக்கப்பட்ட உமிழ்வு விகிதங்கள் அப்படியே இருக்கும்.

| காற்று **மாசுபடுத்தி** | **அனுமதிக்கப்பட்ட மொத்தம் தொகை (ஆண்டு ஒன்றுக்கு** டன்கள்**)** |
|---|---|
| பிஎம் | 49.08 |
| பிஎம்10 | 22.42 |
| பிஎம்2.5 | 3.67 |
| | |
| | |
| | |

புதுப்பிக்கப்படும் வசதிகள், தேவைக்கேற்ப பொருள் பரிமாற்ற பகுதிகளில் நீர் தெளிப்பின் மூலமும், ஆலையின் சாலைகள், போக்குவரத்து பகுதிகள் மற்றும் சரக்கு இருப்புகளில் நீர் பயன்பாட்டின் மூலமும் தொடர்ந்து கட்டுப்படுத்தப்படும்.